DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
STC-145/2019
Prosecution witness – PW.2

| | | |
|---|---|---|
| Name | : திரு. திருமுருகன் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

( All accused present.)
13.12.2023 – 01.20 PM

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது இராமநாதபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் சார் நில அளவையாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2019ம் ஆண்டு கடலாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தேன்.

2. ஆஜர் எதிரிகளைத் தெரியும். சம்பவத்தன்று பார்த்துள்ளேன். கடந்த 20.03.2019ம் தேதி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் W.P (MD).No. 23121/2017 என்ற உத்தரவின் படி வேப்பங்குளம் கிராமத்தைச் சேர்ந்த பொன்னுத்தேவர் என்பவரது இடத்தை அளப்பதற்காக நானும், தலைமை அளவையர் திரு. பாலமுருகன், குறுவட்ட அளவையர் திரு. செந்தில்குமார், வருவாய் ஆய்வாளர் திரு. மனோகரன், கிராம உதவியாளர் திரு. முனியசாமி, பெருநாழி காவல்நிலைய போலீசார் சுமார் 10 பேர் வீதம் வேப்பங்குளம் கிராமத்திற்கு சென்றோம்.

3. நாங்கள் இடத்தை அளப்பதற்காக சென்ற போது ஆஜர் எதிரிகள் அளக்கவிடாமல் தகாத வார்த்தையால் பேசி தகராறு செய்தார்கள். தகாத வார்த்தைகள் தற்போது எனக்கு ஞாபகமில்லை. அளக்க வந்த இடம் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லி தடுத்துவிட்டார்கள்.

4. பின்னர் அளக்க முடியாமல் திரும்பி சென்று, தாசில்தாரிடம் சம்பவம் குறித்து சொல்லிவிட்டு திரு. பாலமுருகன் அவர்கள் பெருநாழி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் சம்பவம் குறித்து என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் முதல் விசாரணையில் கூறிய விபரங்களைத் தான் போலீஸ் விசாரணையில் தெரிவித்துள்ளேன்.சம்பவத்தை ஊர்க்காரர்கள் சுமார் 10 நபர்கள் பார்த்திருப்பார்கள்.

2. அ.சா.1 சம்பவம் குறித்து போன் மூலம் வட்டாட்சியருக்கு தகவல் அளித்து உடனடியாக காவல்நிலையம் சென்று புகார் அளித்தார். நான் உடன் சென்றேன். எதிரிகளின் பெயர்களை என்னால் குறிப்பிட்டு கூற இயலாது. ஆஜா எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்தார்கள்.

3. மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் உடனடியாக சம்பவ இடத்தை அளக்க அ.சா.1 செல்லவில்லை. எவ்வளவு நாட்கள் காலதாமதமாக சென்றார் என்று எனக்கு ஞாபகமில்லை.

4. மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவில் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் சம்பவ இடத்தை பார்வையிடவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 குறிப்பிட்ட நாட்களுக்குள் பார்வையிடாமல் இருந்ததால் பொய்யாக எதிரிகள் மீது புகார் அளித்து, காலதாமதத்திற்கு காரணம் கூறுவதற்காக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. சம்பவ இடத்தில் காவலர்கள் இருந்தார்கள். அவர்கள் தடுக்கவில்லை என்றால் சரியல்ல. சத்தம் போட்டார்கள். புகார் அளிக்க சொன்னதன் அடிப்படையில் அ.சா.1 புகார் அளித்தார்.

பொன்னுத்தேவர் டி.வேப்பங்குளம் கிராமத்தில் முன்னாள் ஊராட்சி மன்ற துணைத்தலைவராக இருந்து வந்தார் என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 அளித்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.